بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**Friday sermon Date 12-09-2014**

*16 Dhul-Qaddah 1435 Hijiri*

## GOD'S MESSENGERS WILL CONTINUE TO COME TILL DOOMSDAY

# இறை தூதர்களின் வருகை இறுதி நாள் வரை நிலை நிற்கும்

**Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)**

உலக மக்களுக்கு சலாம் கூறிக் கொண்ட பிறகு தஷ்ஹீதும் தஅவ்வுசும் அல் பாத்திஹாவும் ஓதி, ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் கீழ் வருமாறு உரையாற்றினார்.

அல்ஹம்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துலில்லாஹ் கடந்த வாரம் ஆற்றிய பிரசங்கத்தின் தொடர்ச்சியாக, அல்லாஹ்வின் ஒரு நபியுடைய தோற்றத்தின் தேவையைக் குறித்தும் அடையாளங்களுடையவும் ஈமானுடையவும் உண்மைகளைக் குறித்தும் நான் பேசிக் கொள்கின்றேன். அல்லாஹ்வின் திட்டங்களைக் குறித்து புரிந்துக் கொள்ள இவை இரண்டும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

நிச்சயமாக எல்லாம் வல்ல இறைவன் கடந்த காலங்களில் பேசிக் கொண்டிருந்தான். அதைப் போன்று இன்றும் அவனது எளிய அடியார்களிடமும் தூதர்களிடமும் பேசிக் கொண்டேயிருக்கின்றான். கருணையுடையோனும் அன்புடையோனுமான ஒரு இறைவன் தன் மக்கள் வழி தவறி செல்வதைக் கண்டு கொண்டு அசையாமல் இருப்பான் என்று நம்பிக்கைக் கொள்வது அடிப்படையற்ற விஷயமாகும். மாறாக அவன் மக்களுக்கு மார்க்க வழி காட்டிடுவான் என்றும் தேவையான வேண்டுகோள் வழங்கிடுவான் என்றும் நம்பிகைக் கொள்ளுதல் கட்டாயமான விஷயமாகும். ஆகவே எனது பிரிய சகோதரி சகோதரர்களே ஒரு இறைவன் இருக்கின்றான் என்றால் நிச்சயமாக அவன் மார்க்க வழி காட்டிக் கொள்வான் என்பது உறுதியாகும்.

தனது அடியார்கள் சோதனைகளில் அகப்பட்டு விடவும், என்றிருந்தும் அவன் எவ்வழியும் காட்டிக் கொள்ளமாலும் அதற்கு தீர்வு வழங்காமலும் இருந்தால், உண்மையின் பால் வழி நடத்திக் கொள்வதற்கான ஆற்றல் அவனுக்கு இல்லை என நாம் கூறவேண்டியதாகயிருக்கும். அல்லது மனித வாழ்வின் நோக்கம் இறைவனை அடைந்துவிடுவதில்லை என கூற வேண்டும் மட்டுமல்ல மனிதனை படைத்திருப்பது, உண்ணுவதற்கும் அருந்துவதற்கும் முற்றிலும் மண்ணுலக வாழ்க்கையை நடத்திக் கொள்வதற்கும் மட்டும் என எண்ண வேண்டியதாகயிருக்கும். ஆனால் இவ்வகை

எண்ணங்களுக்கு முற்றிலும் முரண்பாடு விளைவிக்கின்றதேயாகும் மேல் சுட்டிக் காட்டியிருக்கும் இறை பண்புகள்யாவும்.

இந்த பிரபஞ்சத்தை படைத்தவனுக்கு மனிதனின் ஆன்மீக வாழ்வின் மீது ஒரு அதிகாரவும் இல்லை என எண்ணுவது வீணானதேயாகும். அனைத்தையும் படைத்தவனுக்கு மனிதனின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு வழி வகுத்திடுவதற்கான அதிகாரம், அல்லது அதை உருவாக்கிக் கொள்வதற்கான ஆற்றல் இருக்க வேண்டும் அல்லவா? அனைத்தையும் படைத்த ஒருவன் நிலை நிற்கின்றான் என நாம் அங்கீகரித்துக் கொண்டால் அவனுக்கு எல்லா வித ஆற்றல்களும் உண்டு என நாம் அங்கீகரித்து கொள்ள வேண்டியதும், அவனால் இயலாததாக எதுவுமில்லை என நாம் ஒத்துக் கொள்ள வேண்டியதாகவும் இருக்கும். எல்லா விஷயங்களையும் பூர்த்தி செய்வதற்கு அவனக்கு முடியும். அவனது தூய்மைக்கும் முழுமைக்கும் களங்கம் விழைவிக்காத எதையும் செய்து முடிப்பதற்கான சக்தி அவனுக்கு உண்டு. இவ்வுலக வாழ்கைக்காக மட்டுமே நாம் படைக்கப்பட்டிருக்கின்றோம் என்பது அர்த்த மற்ற சிந்தனை ஆகும். அபாரமான ஞானமுடையவனும் அனைத்தையும் காண்கின்றவனுமான இறைவன் இந்த மிகவானதும் விரிவானதுமான பிரபஞ்சத்தை படைத்திருப்பது எவ்வித நோக்கமும் இல்லை என்று எப்படி கூறிக் கொள்ள முடியும்.

எவ்வித நோக்கவுமின்றி செயல்படுவதற்காக ஒரு எந்திரமும் உருவாக்குவதில்லை. ஒவ்வொரு எந்திரத்தையும் உருவாக்கி கொள்வது உறுதியான நோக்கத்துடனும் லட்சியத்துடனுமாகும். மனிதனின் நிலை நிற்பின் லட்சியம், உண்ணுவதும் அருந்துவதும் தூங்குவதும் என்றால் அதன் பொருள் அவர்களை படைத்திருப்பது சுக சௌக்கியத்துடன் நடந்துக் கொள்வதற்கு மட்டும் என நாம் கூறிக் கொள்ள வேண்டும். ஒருவர் அவரது படைப்பிற்கு ஒரு நோக்கமில்லையென்றால், ஒன்றுக் கொன்றான உதவியினை படைப்பின் வாழ்கை லட்சியமாக எப்படி காண முடியும்? அதைப் போன்றே தூய்மையாளர்களும் நேர்மையாளர்களுமான எல்லா நபர்களைக் குறித்தும் நாம் அவ்வாறே எண்ண வேண்டியதாக இருக்கும். குறிப்பாக நபிமார்கள், சீர்திருத்தாளர்கள். அவர்கள் எந்த நாட்டை சார்ந்தவர்களாகட்டும் சிரியாவிலோ, அரேபியாவிலோ இந்தியாவிலோ இஸ்ரவேலிலோ ஆனாலும் சரி (நஅவுது பில்லாஹ்) அவர்கள் பொய்யாளர்களும் பொய் கூறுவோர்களும் என கூற வேண்டியதாக வரும். மனித குலத்திற்கு ஆன்மீக வழிகாட்டிட எங்களை இறைவன் நியமித்துள்ளான் என்றே இவர்கள் அனைவரும் நம்மை கற்பித்தது. என்றிருந்ததும் இந்த உண்மையாளர்களை எவ்வித நோக்கத்துடனும் இறைவன் நியமித்ததில்லை என நாம் ஒத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கும். அத்தோடு அதற்கான ஆற்றல் இறைவனுக்கு இல்லை என நாம் அங்கீகரித்துக் கொள்ளவும் வேண்டும். அதாவது மனிதனை படைத்திருப்பது இறைத் தொடர்புடையவனாக வாழ அல்ல என நம்பிக் கொள்ள வேண்டும். இந்த கருத்தை பின் பற்றிக் கொள்ள நமது புத்தி ஒத்துக்

கொள்கின்றதா? எவர்கள் இந்த உலகில் மாபெரும் நல்லொழுக்க புரட்சியை எற்படுத்திக் கொண்டார்களோ அந்த மகாத்மாக்களை, நேற்மையும் தூய்மையும் உண்மையுமான அனைத்து வகைகளின் நிறுவியவர்களாகிய அவர்களை, மனித உள்ளங்களில் அன்புடையவும் தூய்மையுடையவும் செடிகளை தோற்றுவித்த அவர்களை, மிகப் பெரிய கள்வர்கள் என்றும் வஞ்சகர்கள் என்றும் பித்தலாட்டகாரர்கள் என்றும் திரையிட வேண்டியதாக இருக்கும். மனித குலத்தின் அறிவிற்கும் நல்லொழுக்கத்திற்கும் ஆன்மீகத்திற்கும் மற்றனைத்து முன்னேற்றங்களுக்கும் வழி வகுத்த, நூற்றாண்டுகள் பின் சென்றும் மாய்த்துக் கொள்ள இயலாத தரத்தில் மனித உள்ளங்களில் புது உயிரையும் உணர்வையும் வழங்கி கொண்ட அந்த மகாத்மாக்களை, அவர்களின் மனதுகளில் உருவான வீண் கற்பனைகளின் உரிமையாளர்காக இந்த மண்ணில் வாழ்ந்திருந்தவர்கள் என நாம் நம்பிக் கொள்ள வேண்டுமோ?

நிச்சயமாக விஷயம் இவ்வாறல்ல! இறைவன் பால் மனிதர்களை எட்டவைப்பதற்கான சில மதங்கள் இந்த பூமியில் நிலை கொள்ள வேண்டும் என்ற நம்பிகையில் சென்றடையாமல் இருக்க எவ்வித வழியுமில்லை. தற்பொழுதுள்ள மதங்கள் அனைத்தும் வழிகேடில் என்றால், மனித குலத்தை நேர் வழி நடத்திச் செல்ல ஒரு புதிய மதம் நிச்சயமாக உருவாக வேண்டும். மாறாக மனிதர்களை இறைவனின் பால் எட்ட வைப்பதற்கான ஒரு மதம் இப்போதும் நிலை நிற்கின்றது, என்றால் அம்மதத்தை மனிதர்கள் கவனித்துக் கொள்ளாமல் இருக்கின்றார்கள் என்றால், ஒரு சீர்திருத்தாளரை எழும்பச் செய்து அம்மதத்தின் பால் மக்களின் கவனத்தைத் திரும்ப பெறச் செய்து, இறைவன் பால் மனித குலத்தைக் கொண்டு செல்வதற்கான வழி அவன் வகுத்திட வேண்டும். புத்தியுள்ள அனைத்து மக்களின் யோசனையும் இதுவாகவேயிருக்கும் என உறுதியாக என்னால் கூறிக் கொள்ள முடியும். உண்மை முழுமையாக மாய்த்துக் கொள்தல், உண்மை சந்தேகத்துக்குள் மறைந்திருக்கல் இவை இரண்டும் மனித சமுதாயத்திற்கு நேர் வழிகாட்டிக் கொள்ள ஒரு போதும் நிகரல்ல. மட்டுமின்றி மனிதர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு இவை இரண்டும் பகிரங்மான முறிவுகளே ஆகும்.

எனது பிரியமான சகோதரர்களே, சகோதரிகளே, குழந்தைகளே, மனிதர்களின் பரிபூரணமான சீரமைப்பு லட்சியத்திற்காக அதாவது உடலளவும் நல்லொழுக்கமும் ஆன்மீகவுமான வாழ்கைக்காக நிலை நிற்கும் சிறந்த மதமே இஸ்லாம். நிச்சயமாக இஸ்லாம் ஆகயிருந்தது. இஸ்லாம் ஆகின்றது. இஸ்லாம் ஆகவே இருக்கும். எல்லா நபி மார்களுடையவும், உண்மையாளர்களுடையவும், ஆன்மீக அகப்பார்வையுடையவர் களுடையவும், சத்திய ஞானத்தால் ஒளி மயமானவர்களுடையவும் மதவும் இஸ்லாம் ஆகும். ஆரம்ப கால முதல் நிலை நின்ற மதவும் இஸ்லாம் ஆகும். இறுதி காலம் வரை நிலை நிற்கும் மதவும் இஸ்லாம் ஆகும். காத்த முன் நபியீன் ஆன முஹமது (ஸல்) வின் தோற்றத்திற்கு பின்னரே எல்லாம் வல்ல இறைவன் இந்த மதத்திற்கு அங்கீகாரம்

வழங்கியதும், அதை பரிபூரணமாக தூய்மைப்படுத்தியதும், அந்நியர்களின் கையேற்றத்திற்கு இடம் கொடுக்காத அளவிற்கு இறுதி காலம் வரை அதை பாதுகாத்துக் கொள்ள தீர்மானித்ததும். நபி அரசன் முஹமது (ஸல்) வின் தோழர்களுக்கு நாம் இந்த உண்மையினை சுட்டிக் காட்டிட வேண்டும். ஏகனான இறைவனை வணங்குங்கள் என்ற செய்தியினை எட்ட வைப்பதோடு திருக்குர் ஆனை இறுகப்பிடிப்பதற்கும் அது வழியாக மனித குலத்தை இறைவன் வழியில் நடத்திக் கொள்வதற்கும் முடிகின்றது. இஸ்லாமின் அழகின் பிரதிபிம்பமாக திகழுகின்ற நபி அரசன் முஹமது (ஸல்) வின் முழுமையான வாழ்கை முன் மாதிரிகையின் பால், மனித குல வாழ்கையின் வனப்பின்பால், இறை உண்மையின் வடிவின் பால், அரசர்களின் அரசனின் பால், எல்லாம் வல்ல இறைவனின் பால் மனிதனை அழைத்துச் செல்லும் மதமே இஸ்லாம். இந்த மதத்தில் இருந்து இறைவன் அவனது பிரிதிநிதிகளாக இஸ்லாமிக சீர் திருத்தாளர்களையும் நபி மார்களையும் தேர்ந்தெடுத்து, பரிசுத்த நபி முஹமது (ஸல்) என்ற முழுமைப் பெற்ற மனுகுல மன்னனின் ஆன்மீக புதல்வர்களாக நியமித்து, அது வழி அவனது ஆட்சியை மலரச் செய்து அவர்களுக்கு நேர் வழி காட்டிக் கொள்ளவும் செய்கின்றான்.

நிச்சயம்! எல்லாம் வல்ல அல்லாஹ் அவனது திரு மறை வழியாக கூறுகின்றான்.

**‘‘நாம் உம்மை மனித குலம் முழுமைக்கும் நற்செய்தி கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமேயன்றி அனுப்பவில்லை. ஆனால் மனிதர்களில் பெரும் பாலோர் இதை அறிய மாட்டார்கள்’’ (34-29)**

எல்லாம் வல்ல இறைவன் தன் மனித அடியார்களுக்கு அவர்கள் விரும்புகின்றதினை தேர்ந்தெடுப்பதற்கான சுதந்திரம் வழங்கியிருக்கின்றான். ஆகவே இறை gphpjp நிதிகள், எவரையும் இறை மதத்தில் நுழைவதற்கு வற்புறுத்துவதில்லை. அதற்கான அதிகாரம் அவர்களுக்கில்லை. அதனால் ஆகும் திருக்குர் ஆனில் அல்லாஹ் இவ்வாறு கூறியிருப்பது. ‘‘இறைதூதர் நற்செய்தி வழங்குவோர் மட்டுமே’’ என. அதவாது உளப் பூரணமான இறை வணக்கம் மூலமாகவும் முழுமைப் பெற்ற சமர்ப்பணம் மூலமாகவும் இறைவன் பால் திரும்பிக் கொள்வதற்கு இறைவனிடம் இருந்து ஒரு அழைப்பு. **‘‘இதுவே நற்செய்தி வழங்குவோர்’’**. அதைப் போன்றே அல்லாஹ்விடம் இருந்துள்ள ஒரு எச்சரிகையாளர் மட்டுமே நபி அதாவது மனிதர்களின் பௌதீக விருப்பங்கள் அவர்களை விண்ணுலகிலும் மண்ணுலகிலும் பார்வையற்றவர்களாக பரிணமிக்க செய்யும் என்றும் மனிதன் உண்மைப் பாதையில் இருந்து தடுமாறி சாத்தானின் வழி சென்றால் நிச்சயம் அல்லாஹ் கடினமாக தண்டிப்பான். ‘‘**இதுவே எச்சரிக்கை விடுப்பவர்**’’.

நேர்மையான மார்க்க தரிசனம் இல்லாமல் நீண்ட காலம் உலகிற்கும் மனிதர்களுக்கும் தூய்மையாளர்களாக இருக்க முடியாது. அதனால் அல்லாஹ் அவனது பிரதி நிதிகளை நபி மார்களாக அனுப்பி வைத்துக் கொண்டிருந்தான். அவனது இறை வல்லமையைக் குறித்து மக்களை கற்ப்பிபதற்கு. அவ்வாறு அம் மக்களுக்கு இறை மார்க்க தரிசனம் கிடைத்திடவும் இது எல்லாம் வல்ல இறைவனின் கருணைக்கு ஆளாகிக் கொள்ளவும், அது வழியாக இம்மைக்கும் மறுமைக்குமான சக்தி அவர்களுக்கு கை வந்து விடவும் செய்தது. சந்தேகமின்றி திருக் குர் ஆன் கூறுகின்றது.

**‘‘மார்க்கத்தில் எவ்வகையான நிர்ப்பந்தவுமில்லை’’ (2-257)**

இறைவனால் தோற்றுவித்த தூதரிடம் இணைந்து விட்டவர்கள் பாக்கிய சாலிகள்! அவர்களின் காலத்தில் தோன்றிய நபியே ஆவார் அவர். அல்லாஹ்வின் திருப்திக்காக தங்களை அர்பணம் செய்தவர்களே அவர்கள். அவர்கள் அல்லாஹ்வின் பாதுகாவல் வாட்டரத்துக்குள் ஆவார்கள். இறைவன் அவர்களின் பாதுகாவலனாக இருப்பானாக! அவர்களின் இரட்சகனாகவும் அவன் நிலை கொள்வான். உடல் அளவிலும் நல்லொழுக்க நிலையிலும் ஆன்மீக வகையிலும் இறைவன் இவர்களின் நன்மைகளின் ஊற்றாக இருப்பான். அவர்கள் இறை தூதரின் கட்டுபாட்டுக்குள் திகழுவார்கள். அவர்கள் இறை மார்க்க தரிசனத்தின் தணலில் வாழ்கையை அமைத்துக் கொள்வார்கள். இன்ஷா அல்லாஹ்!

உலகின் எல்லா பகுதிகளிலும் இஸ்லாமை வெற்றி பெற செய்வதற்காக, அல்லாஹ்வின் மதத்தை வெற்றி பெற செய்வதற்காக இரவும் பகலும் அசாதாரணமான நிலையில் என் தலைமையின் கீழ் செயல்படுகின்ற ஜமா அத்துச் சஹிஹீல் இஸ்லாமின் உறுப்பினர்களாகிய உங்கள் ஒவ்வொரு நபருக்கும் அல்லாஹ் அருள் புரிவனாக! உங்களின் பிரதி பலன் அல்லாஹ்வாக இருக்கட்டும்! ஆமீன். இந்த நூற்றாண்டில் தன் சுற்று வட்டாரத்தை சீரமைக்க விரும்புகின்ற எல்லா தூய்மையான உள்ளங்களுக்கும் அல்லாஹ் மார்க்கதரிசனம் வழங்குவானாக! ஜமா அத்துச் சஹிஹீல் இஸ்லாமின் வெற்றிகாக, இஸ்லாமின் பரிபூரணமான வெற்றிக்காக! இன்ஷா அல்லாஹ். நாம் அனைவர்களின் மீதும் அல்லாஹ்வின் அன்பு இறங்கட்டும். ஆமீன்.

**Issued by:**
Jamaat-UI-Sahih-Al-lslam
Dawa Department
Tamilnadu (Regd.No:A/693
Web: www.jamaat-ul-sahih-al-islam.com

*Translated by*
**Azim Ahmad**
Sadr Sahibul Faraj
Kerala/ Tamil Nadu
Cell: 9947181650
9789180817